பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 07 சனிக்கிழமை 23.07.2022 கதிர் 149

ரயிலில் இருந்து தள்ளி விழுத்தி

பாதுகாப்பு உத்தியோகத்தரை படுகொலைசெய்த பயணிகள்

குடிபோதையில் இருந்த ரயில் பயணிகள் இருவர், ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை ரயிலில் இருந்து உதைத்துத் தள்ளி விழுத்திப் படுகொலை செய்துள்ளார்.

இன்று காலை வெயங்கொடைப் பகுதிக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ☞2

கறுப்பு ஜூலைக் கலவரத்தில் பலியானவர்களை யாழ். வந்து நினைவேந்தினார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 23 (இ.கலையமுதன்)

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் யாழ்ப்பாணத்தில் இன்று நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

வடமராட்சியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இன்று முற்பகல் 10.30 மணியளவில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன், கே.சயந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1983ஆம் ஜூலை மாதம் 23, 24, 25 ஆகிய தினங்களில் நடந்த கறுப்பு ஜூலைக் கலவரத்தின் போது தமிழர்கள் பலர் கொல்லப்பட்டதுடன் சொத்துக்களும் அழித்து நாசமாக்கப்பட்டன.

தமிழர் பிரச்சினையில் அதீத கவனம்; ரணிலை நம்பவேண்டும் கூட்டமைப்பு

பிரதமர் தினேஷ் பகிரங்கக் கோரிக்கை

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நானும் அதீத கவனத்துடன் செயற்படுவோம். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட வேண்டும்.

- இவ்வாறு புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். ☞2

அரசின் நல்ல செயல்களுக்கு ஆதரவு வழங்கும் எதிர்க்கட்சி

சஜித் பகிரங்க அறிவிப்பு

அரசு மேற்கொள்ளும் நல்ல பணிகளில் எந்நிலையிலும் பின்வாங்காது எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாங்கள் எப்போதும் ஆதரவை வழங்குவோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதேவேளை, காலிமுகத்திடலில் நேற்றுமுன்தினம் இரவு நிகழ்த்தப்பட்ட அரசபயங்கரவாதச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தொழிற்சங்கங்கள் ☞2

'கோல்பேஸ்' தாக்குதலை விவாதிக்க சபையைத் திங்களன்று கூட்டுங்கள்!

பிரதமரிடம் சஜித் அணி கோரிக்கை

நாடாளுமன்றத்தை நாளைமறுதினம் திங்கட்கிழமை கூட்டுமாறு பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

சபையைக் கூட்டி நேற்று அதிகாலை ஜனாதிபதி செயலகத்துக்கு ☞2

ரணில் அரசுடன் சங்கமிப்பர் சஜித் அணி உறுப்பினர்கள்!

அமைச்சர் ஹரின் நம்பிக்கை

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அரசுடன் இணைவார்கள் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி செயலக வளாகத்தில் இருந்துதான் போராட்டக்காரர்கள் ☞2

எரிபொருள் பெற இலக்கத்தகடுகளை மாற்றினால் மூன்று மாதங்கள் சிறை!

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் செல்லும்போது வாகனத்தின் இலக்கத்தகடுகளை மாற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் 20 ஆயிரம் ரூபா அபராதம் அல்லது மூன்று மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றத்துக்காக வாகனத்தின் உரிமையாளரைக் கைதுசெய்து, அந்தக் குற்றத்துக்கான தண்டனையை நீதிமன்றத்தில் வழங்க முடியும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

1984 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டம், 2009ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது மற்றும் அதில் காட்டப்பட்டுள்ளபடி இந்த அபராதங்களைச் செயற்படுத்தலாம்.

மேலும், இந்தக் குற்றத்தின் இரண்டாவது அல்லது அதற்குப் பிறகு பிடிபட்ட நபருக்கு 30 ஆயிரம் ரூபாவுக்கு குறையாத ஆனால் 50 ஆயிரம் ரூபாவுக்கு அதிகரிக்காத வகையில் அபராதம் அல்லது 3 மாதங்கள் ☞2

'ரணில் - ராஜபக்ஷக்களின் தாக்குதலை மிகவும் வன்மையாகக் கண்டிப்போம்'

யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம்

(இ.கலையமுதன்)

கொழும்பு - காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்று கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோல்பேஸ் போராட்டக்காரர்கள் ☞2

யாழில் எரிபொருள் அட்டையைப் பெற காத்திருந்தவர் மயங்கி விழுந்து சாவு!

யாழ்., ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் எரிபொருள் அட்டையைப் பெறக் காத்திருந்தவர் திடீரென மயங்கி சரிந்து உயிரிழந்துள்ளார்.

வேலணை, புளியங்கூடல் பகுதியைச் சேர்ந்த நடராசா பிரேம்குமார் (வயது 48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று தனக்கான எரிபொருள் அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக ஊர்காவற்துறை பிரதேச செயலகத்துக்குச் சென்று காத்திருந்த வேளை திடீரென மயங்கிச் சரிந்துள்ளார்.

அதையடுத்து அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தமிழர் பிரச்சினையில் அதீத கவனம்; .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுப் பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களின் பலவிதமான கேள்விகளுக்குத் தினேஷ் குணவர்தன பதிலளித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு

'கோல்பேஸ்' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விவாதம் நடத்துமாறும் பிரதமரிடம் கோரப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் கொறடாவான ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இது தொடர்பான கோரிக்கையைப் பிரதமரிடம் முன்வைத்துள்ளார்.

அரசின் நல்ல செயல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தொழிலாளர் சங்கங்களின் தலைவர்களின் ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் 69 லட்சம் மக்கள் ஆணை பெற்ற முன்னாள் ஜனாதிபதி கூட மக்கள் கருத்துக்குப் பணிந்து நாட்டை விட்டு ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை இந்நாட்டின் அனைத்து அரசியல்வாதிகளும் புரிந்துகொள்வது மிகவும் பொருத்தமானது.

பின்னர் நாடாளுமன்றத்தில் ஒரு வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி நியமிக்கப்பட்டார். இந்நியமனம் 22 மில்லியன் மக்களின் விருப்பத்தின் பிரகாரமின்றி மாறாக கோட்டாபய ராஜபக்ஷவுக்குச் சாதகமான தரப்பால் மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியாக நாங்கள் மக்கள் கருத்துக்குப் பணிந்து செயற்பட்டோம். 225 பேரும் ஒன்றே என்ற சமூகக் கருத்து இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அரசு மேற்கொள்ளும் நல்ல பணிகளில் எந்நிலையிலும் பின்வாங்காது எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாங்கள் எப்போதும் ஆதரவை வழங்குவோம் - என்றார்.

எரிபொருள் பெற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைத்தண்டனை விதிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது.

வாகன இலக்கத்தின் கடைசி இலக்கத்துடன் தொடர்புடைய திகதிகளில் சிலர் வாகனங்களின் இலக்கத்தகடுகளை மாற்றிக்கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வந்ததாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரணில் அரசுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கப்பட்டுள்ளனர். 'கோல்பேஸ்' போராட்டக்களம் அகற்றப்படவில்லை. போராட்டக்காரர்களின் இலக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன்.

புதிய ஜனாதிபதி தற்போது நியமித்துள்ள அமைச்சரவை தற்காலிக அமைச்சரவைதான். சர்வகட்சி அரசொன்றை அமைக்கவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அதில் இணைவார்கள் - என்றார்.

ரணில் - ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதான ரணில் - ராஜபக்ஷக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைவன்மையாகக் கண்டிப்போம் எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காலிமுகத்திடலில் உள்ள 'கோட்டா கோ கம' பகுதிக்குள் நேற்று அதிகாலை நுழைந்த முப்படையினர் மற்றும் பொலிஸார் அங்கிருந்த கொட்டகைகளை அகற்றியதுடன் போராட்டக்காரர்கள் மீதும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர். குறித்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே யாழில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்களிப்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்தலைமை எடுத்த தீர்மானம் தொடர்பில் இனி நாம் பதிலளிப்பது அழகு அல்ல. எனினும், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியாகத் தெரிவாகிய அன்று சபையில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, தன்னுடன் இணைந்து பயணிக்க சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தார். எனவே, ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட வேண்டும். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியும் நானும் அதீத கவனத்துடன் செயற்படுவோம். - என்றார்.

பாதுகாப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடிபோதையில் இருந்த ரயில் பயணிகள் இருவர் ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கொழும்பு - யாழ்ப்பாணம் இன்டர்சிட்டி ரயிலில் இருந்து உதைத்துத் தள்ளி விழுத்தியதில் குறித்த பாதுபாப்பு உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

ஆடிக் கலவர காலம்

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் மிருகத்தனமான கொடூரப் பண்பியல்பை – உண்மை முகத்தை – சர்வதேசத்திற்கும் அம்பலப்படுத்திய ஆடிக் கலவரக் கொடூரம் நடந்து 39 ஆம் ஆண்டு நினைவு நாளில் நாம் இன்று நிற்கின்றோம்.

தென்னிலங்கை எங்கும் பெரும் ஊழிக் கூத்தாகக் கிளர்ந்து, பேயுருக் கொண்டு அட்டூழியம் புரிந்த 'பஞ்ச சீல' தேசத்தின் கோர முகத்தைக் கண்டு உலகமே விக்கித்துப் போன ஒரு குரூரத்தின் நிலவழியா நாள்களை நாம் கடக்கின்றோம்.

பேரினவாதத்தின் இரத்தக் காட்டேரி வெறியாட்டம் சுமார் 300க்கும் அதிகமான தமிழர்களின் உயிர்களைக் குடித்தது, பல்லாயிரம் தமிழர்களை படுகாயப்படுத்தி, பலரை நிரந்தர அங்கவீனர்களாக்கியது. பல்லாயிரம் கோடி ரூபா தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தீயிட்டு எரிக்கப்பட்டன. கொள்ளையிடப்பட்டன. ஆக்கிரமிக்கப்பட்டன.

இலங்கைத் தீவில் தமிழர்கள் மீதான தனது மேலாதிக்கத்தை வெறிபோக்குடன் நிரூபித்து, வெளிப்படுத்துவதற்கான திமிர்த்தனத்துடன் சிங்களம் அன்று ஆரம்பித்த வன்முறை, அடுத்த கால் நூற்றாண்டு காலம் முழு இலங்கைத் தீவையுமே இரத்த ஆறு பெருக்கெடுத்தோடும் யுத்தபூமியாக்கியது.

ஆடிக் கலவரம் அடுத்த 26 ஆண்டுகள் முழுநாட்டையுமே கலவர பூமியாக்கியது. அதிலிருந்து இன்றும் கூட – இன்னும் கூட – நாடு மீளவேயில்லை.

மனிதப் பண்பியல்புகளுக்கு ஒவ்வாத, மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான இயல்புகளில் வனையப் பெற்றதே சிங்கள, பௌத்த நாகரிகம் என்பதை சர்வதேசத்தின் முன்னால் நிரூபிக்கும் சம்பவமாகவே ஆடிக் கலவரம் அரங்கேறி அடங்கியது.

தமிழர்கள் தங்கள் இனத்தை – இருப்பை – தனித்துவத்தை – வாழ்வியலை – வரலாற்றை – தக்க வைப்பது எனில் பௌத்த, சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக அதே ஆயுத முறையில் கிளந்தெழுவதே ஒரே வழி என்ற அனுபவப் பாடத்தை, தமிழர் தரப்புக்கு எடுத்துரைக்கும் ஒரு நிகழ்வாகவே ஆடிக் கலவரக் கொடூரம் கட்டவிழ்ந்தது.

தலைநகரில் கலவரம் வெடித்த சமயத்தில் அதன் குரூரம் சிங்களத்தின் சிறையிலும் தனது கோர முகத்தைக் காட்டத் தவறவில்லை. வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளில் 53 பேர் மிகக் கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

'மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் என் கண்களை இன்னொருவருக்குத் தானமாக அளித்து அந்தக் கண் மூலம் தமிழீழம் மலர்வதைக் காண்பேன்' என நீதிமன்றத்தில் சூளுரைத்த போராளி குட்டிமணி மற்றும் தங்கதுரை ,ஜெகன் உட்பட தமிழ் வீர மறவர்கள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் கண்கள் பிடுங்கி எறியப்பட்டன.

சிங்களக் காவலர்களின் துணையுடன் சிங்கள கைதிகள் புரிந்த இந்த வெறியாட்டம் முழு சிங்கள தேசத்தின் மனவமைப்பையும், அதன் காட்டுமிராண்டித்தன மாண்பையும் உலகுக்கு அம்பலப்படுத்தத் தவறவில்லை.

தமிழர்களின் ஆயுதம் தாங்கிய உரிமைப் போராட்டம் முளை விடுவது கண்டு, அதன் மீதான ஆத்திரத்தில் இந்தம் கொடூரத்தை சிங்களம் ஆடிக் கலவரமாகக் கட்டவிழ்த்து விட்டது என்றாலும், கடைசியில் அந்த விடுதலைப் போராட்டத்தின் விஸ்வரூப எழுச்சிக்கு அந்தக் கலவர நடவடிக்கைகளே காரணமாயிற்று என்ற அனுபவத்தை கற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயமே சிங்களத்துக்கு அதனால் ஏற்பட்டது.

ஆனாலும், அப்படிப் பட்டறிந்தும், இன்னும் சிங்கள தேசம் திருந்தவே இல்லை என்பதுதான் கடந்த 39 வருட கால சரித்திரப் பெறுபேறாக நீடிக்கின்றது.

போராட்டக்காரர் மீதான தாக்குதல் மனிதாபிமானமற்ற ஒரு செயல்!

கரு ஜயசூரிய கண்டனம்

இலங்கை அரசியலின் முக்கியமான திருப்பு முனையாக அமைந்திருந்த காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான பாதுகாப்பு தரப்பினர் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மனிதாபிமானமற்ற செயல். மேலும் ஆட்சியாளர்கள் நாகரிகமான முறையில் நெருக்கடிகளை தீர்ப்பதற்கு விரும்பவில்லை என்பதே இதன் ஊடாக புலப்படுகிறது என்று நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்–

ஜனநாயக மிக்க சமூகத்தில் மாற்றுக் கருத்து உடையவர்களுக்கு தனது கருத்துகளைத் தெரிவிப்பதற்கும் அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

பல்வேறு சமூக குழுக்களின் பொதுவான அபிலாஷைகள் ஒன்று சேர்ந்திருந்தமையால் காலிமுகத்திடல் போராட்டமானது உயிர்ப்புடன் செயல்பட்டு வந்தது.

இந்நிலையில், சுதந்திரத்துக்குப் பின் இலங்கை வரலாற்றில் வரையறையற்ற அதிகாரங்களை தன் வசம் வைத்திருந்த ஆட்சியாளர் நாட்டை விட்டு தப்பி ஓடுவதற்கான சூழ்நிலையில் ஏற்படுத்துவதற்கு இந்தப் போராட்டமும், இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களின் ஒருமித்த கருத்தும் காரணமாக அமைந்திருந்தமையை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

போராட்டக்காரர்கள் கைப்பற்றி இருந்த ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வெளியேறுவதற்கு அவர்கள் தயார் நிலையில் இருந்ததோடு இது போன்ற சூழ்நிலையில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானற்ற இந்த தாக்குதலை யாராலும் நியாயப்படுத்த முடியாது.

எமது நாட்டின் அரசியல் சமூகம் நாகரிக முறையில் நெருக்கடிகளையும் கருத்து வேறுபாடுகளையும் தீர்ப்பதற்கு விரும்பவில்லை என்பது இதன் ஊடாக புலப்படுகிறது. இதனை அகற்றுவது சமூகத்தின் கடமையாக அமைந்திருக்கும் அதேவேளை அதற்கான தலைமைத்துவத்தை நாட்டின் அரசியல் தரப்பு மேற்கொள்ள வேண்டும்.

இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அனைத்து இனக்குழுக்களும் கொள்கை உறுதியுடன் முன்வந்து வன்முறைகளுக்கு இடமளிக்காமல் இருப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். – என்றார்.

பின்வாசல் வழியாக ஜனாதிபதி வரை வந்தவர் அடக்குமுறை திட்டங்களை வகுத்து வருகிறார்!

குமார் குணரட்னம் காட்டம்

அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் என காட்டிக்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க, அந்த அரசமைப்புச் சட்டத்திற்குள் இருக்கும் பேச்சுரிமை மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தும் உரிமைகளை கோழைத்தனமான தாக்குதல் ஊடாக சவாலுக்கு உட்படுத்தியுள்ளார் என முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரதான செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நாடாளுமன்றத்துக்குள் மக்களின் நிலைப்பாடுகள் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை, இதனால், அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக சகல அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். மக்களின் ஆணையின்றி பின்வாசல் கதவு வழியாக ஜனாதிபதி பதவிக்குள் புகுந்த நபர், மக்களை அடக்கும் திட்டங்களை வகுத்து வருகிறார். அடக்குமுறைக்கு அஞ்சி தப்பியோடாது ஒருங்கிணையுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது வெள்ளி அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கலந்துக்கொண்ட பாதுகாப்பு படையினர் எனக் கூறிக்கொண்டவர்கள், முகத்தை மூடியவாறு அடையாளம் காணமுடியாதபடி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது முகத்தை மூடிக் கொண்ட நபர்களின் தாக்குதலை படையினர் தடுக்கும் விதத்தை காணலாம் எனவும் குமார் குணரட்னம் கூறியுள்ளார்.

ஒரு லட்சம் ரூபாவை எட்டும் சைக்கிளின் விலைகள்!

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வாக நாட்டில் பலர் சைக்கிள்களுக்கு பழகி வருகின்றனர் எனவும் இதன்காரணமாக உதிரிப் பாகங்களின் விலை வேகமாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சைக்கிள் மீண்டும் பிரபலமடைந்து வருவதால் அதிக தேவை ஏற்பட்டுள்ளதாக ஹொரணை வர்த்தகர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

விற்பனை செய்ய முடியாமல் பல மாதங்களாக ஷோ ரூம்களில் இருந்த சைக்கிள்கள் இன்று அதிகரிக்கியுடன் விற்கப்படுகின்றன.

அந்தத் தேவையால், 10,000-15,000 ரூபாவுக்கு விற்கப்பட்ட சைக்கிள், இன்று 80,000-95,000 ரூபாவுக்கு விற்கிறோம். அதில், டயர் டியூப் மற்றும் இதர உபகரணங்களின் விலையும், அதை விட அதிகரித்துள்ளன என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக ஹொரணை, இங்கிரிய, பண்டாரகம, பாணந்துறை, களுத்துறை, மத்துகம போன்ற முக்கிய நகரங்களில் மக்களின் போக்குவரத்துக்கு சைக்கிள் ஒரு வழியாக மாறியுள்ளது.

பிரேஸிலில் குடிசைப் பகுதியில்

சிட்டுக்குருவிகளை சுடுவதுபோல் 18 இளைஞர்கள் சுட்டுக்கொலை

பிரேஸில் நாட்டில் திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடையனர் என சந்தேகிக்கப்படும் 18 நபர்களை சிட்டுக் குருவிகளை சுடுவதை போல பொலிஸார் சுட்டுத் தள்ளியசம்பவம்பெரும்அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது. பிரேஸிலில்முக்கியநகரமானரியோ-டி-ஜெனிரோவின் வடக்கு பகுதியில் உள்ள ஒரு குடிசைப் பகுதியில் புகுந்து ராணுவம் மற்றும் பொலிஸார் அங்கு கண்ணில்பட்ட இளைஞர்களை சுட தொடங்கினர். இதில் 18 பேர் கொல்லப்பட்டனர். பலருக்கு உடலில் குண்டுகள் பாய்ந்து படுகாயம் அடைந்துள்ளனர். பாரம் ஏற்றி வரும் கனரக வாகனங்களில் கொள்ளையடித்த மற்றும் கடைகளில் கொள்ளையடித்தவர்களை கைது செய்ய பொலிஸார்மற்றும் ராணுவத்தினர் அந்த குடிசைப் பகுதியில் புகுந்தனர்.

ஆனால் அவர்களை கைது செய்வதற்கு பதிலாக துப்பாக்கிச்சூடு நடத்தி சுட்டுக் கொன்ற சம்பவம் மனித உரிமை ஆர்வலர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இதுகுறித்து மனித உரிமை ஆர்வலர் கில்பெர்டோ தெரிவித்ததாவது, காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க பொலிஸார் உதவவில்லை. அவர்கள் உதவவும் மாட்டார்கள். தண்ணீர் கொண்டு செல்லும் வண்டிகளிலும், பின்னர் வான்களிலும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என கூறினார்.

கடந்த ஆண்டு இதே குடிசை பகுதிக்குள் புகுந்த பொலிஸார், 28 பேரை சுட்டுக் கொன்றனர்.

கொல்லப்பட்டவர்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்பது குற்றச்சாட்டாகும். கடந்த மே மாதம் 25ம் திகதி ரியோ - டி - ஜெனிரோவில் உள்ள விலா குரைஸோரோ என்ற இடத்தில் போதைப்பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த 25 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். கடந்த மாதம் 25ம் திகதி பாராடா ஜீஸுகா என்ற குடிசைப் பகுதியில் நகைக் கடை கொள்ளை முயற்சியை தடுக்க முயன்ற பொலிஸார் 28 பேரை சுட்டுக் கொன்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க நாடாளுமன்றம் மீது தாக்குதல் நடத்தியது ட்ரம்ப் தான்

விசாரணை அறிக்கையில் தகவல்

அமெரிக்க நாடாளுமன்ற கட்டடமான கேபிட் டோல் மீது கடந்த ஆண்டு அப்போதைய அதிபர் டொனால்டுட்ரம்ப்குண்டர்களை ஏவிவிட்டு திட்டமிட்டே தாக்குதல் நடத்தினார் என அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 2021ம் ஆண்டு ஜனவரி 6ம் திகதி உலக வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத வகையில் அமெரிக்க நாடாளுமன்ற கட்டடமான கேபிட்டோல் மீது ட்ரம்ப் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு பிறகு தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து சான்று அளிக்கும் பணியில், நாடாளுமன்ற ஊழியர்கள் ஈடுபட்டு இருந்த போது, உள்ளே புகுந்து ட்ரம்ப் ஆதரவாளர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். இதில் உயர் பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலை ட்ரம்ப் திட்டமிட்டே நடத்தினார் என்று விசாரணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது. தாக்குதல் நடப்பதை உணவு அருந்தும் அறையில் அமர்ந்தபடி தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டே ட்ரம்ப் ரசித்துக் கொண்டு இருந்தார் என்று விசாரணைக் குழுவினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இங்கிலாந்தில் வரலாறு காணாத வெப்பம்

சிக்னல்கள் உருகியதால் ரயில் போக்குவரத்து பாதிப்பு

இங்கிலாந்தில் நிலவும் வரலாறு காணாத வெப்பம் காரணமாக ரயில்வே சிக்னல்கள் உருகியதால் ரயில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. 40டிகிரி செல்சியல் வரை வெப்பம் பதிவாகி வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தாய்வானுக்கு போயே தீருவேன் சபாநாயகர் பெலோசி பிடிவாதம்

சீனாவின் மிரட்டலையும் மீறி, தாய்வானுக்கு செல்வதில் அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி உறுதியாக இருப்பதால் பரபரப்பு நிலவுகிறது. தாய்வான் நாட்டை மீண்டும் தனது நாட்டுடன் இணைப்பதில் சீன அதிபர் ஜின்பிங் தீவிரமாக இருக்கிறார். அதை தடுப்பதில் அமெரிக்க அதிபர் பைடனும் தீவிரமாக உள்ளார். இதற்காக தேவைப்பட்டால் ராணுவ ரீதியாக மோதவும் இருவரும் தயாராக உள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி கடந்த ஏப்ரலில் தாய்வான் செல்ல இருந்தார். அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதால், அந்த பயணம் ரத்தானது. சமீபத்தில், அடுத்த மாதம் அவர் தாய்வான் செல்வதாக தகவல் வெளியானது. இதை கண்டித்த சீனா, 'பெலோசி தாய்வான் வந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்,' என்று எச்சரித்துள்ளது. இருப்பினும், தாய்வானுக்கு செல்வதில் பெலோசி பிடிவாதமாக இருக்கிறார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் அதிபர் பைடன் நேற்று அளித்த பேட்டியில், "தற்போதைய சூழலில், பெலோசி தாய்வான் செல்வது நல்லதல்ல என்று ராணுவம் எச்சரித்துள்ளது,' என்று தெரிவித்தார். தாய்வானுக்கு கடந்த 25 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க எம்.பியான நியூட் ஜின்கிரிச் சென்று வந்தார். அது மிகப்பெரிய சர்ச்சையான நிலையில், தற்போது பெலோசி அங்கு செல்வதில் உறுதியாக இருப்பதால் பரபரப்பு நிலவுகிறது.

அமெரிக்க அதிபர் பைடன் (79) ஏற்கனவே 2 டோஸ் கொரோனா தடுப்பூசி, 2 பூஸ்டர் தடுப்பூசியை போட்டுள்ளார். இருப்பினும், அவருக்கு நேற்று கொரோனா தொற்று ஏற்பட்டு இருப்பது உறுதியானது. லேசான அறிகுறிகளுடன் பாதிக்கப்பட்டு உள்ள அவர், வெள்ளை மாளிகையில் தனிமைப்படுத்தி கொண்டுள்ளார்.

கூட்டணியில் பிளவு இத்தாலி பிரதமர் ராஜினாமா

இத்தாலியில் தன் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பை கூட்டணி கட்சியினர் புறக்கணித்ததால் பிரதமர் மேரியோ ட்ராகி பதவியை ராஜினாமா செய்தார். இத்தாலியில் வலது, இடதுசாரிகள், பாப்புலிஸ்ட் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் மேரியோட்ராகி கடந்தாண்டு பிரதமராக பொறுப்பேற்றார். இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கூடிய கொரோனா மீட்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் மேரியோவின் வேண்டுகோளை கூட்டணிக் கட்சிகள் நிராகரித்தன. இதனால், கூட்டணிக்குள் பிளவு ஏற்பட்டது.

இதன் எதிரொலியாக செனட் அவையில் அவர் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த முடிவெடுக்கப்பட்டது. ஆனால், இதனை கூட்டணிக் கட்சிகள் புறக்கணித்தன. இதை அடுத்து, ட்ராகி தனது பதவியை நேற்று ராஜினாமா செய்தார். ராஜினாமா கடிதத்தை ஏற்ற அதிபர் செர்ஜியோ மட்டரெல்லா, புதிய பிரதமர் நியமிக்கப்படும் வரை அவரை காபந்து பிரதமராக பணியை தொடர கேட்டுக் கொண்டுள்ளார். மேரியோவின் பதவிக் காலம் அடுத்தாண்டு முடிய இருந்த நிலையில், அவர் ராஜினாமா செய்திருக்கின்றமையால், இத்தாலியில் வரும் செப்டெம்பர் அல்லது ஒக்ரோபரில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் என தெரிகிறது.

தமிழகம் முழுவதும் மின்கட்டண உயர்வு பா.ஜனதா இன்று கண்டன ஆர்ப்பாட்டம்

மின்கட்டண உயர்வை கண்டித்து இன்று தமிழகம் முழுவதும் பா.ஜனதா சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று மாநில தலைவர் அண்ணாமலை அறிவித்து இருந்தார். அதன்படி 60 கட்சி மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது. சென்னையில் இன்று 6 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. வடசென்னை மேற்கு மாவட்டம் சார்பில் பெரம்பூர் ரயில் நிலையம் எதிரில் மாவட்ட தலைவர் கபிலன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. சிறப்பு அழைப்பாளராக மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் கலந்து கொண்டார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொது செயலாளர்கள் எஸ்.முத்தையா, ஆர்.பி.சரவணன், இளமதி உள்பட பலர் கலந்துகொண்டனர். அம்பத்தூர் தொழிற்பேட்டை பஸ்நிலையம் அருகே சென்னை மேற்கு மாவட்ட தலைவர் மனோகரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாநில துணைத் தலைவர் கரு.நாகராஜன், செயலாளர் சதீஷ்குமார், பாஸ்கரன், நடிகை ஜெயலட்சுமி, பொது செயலாளர்கள் தியாகராஜன், சுப்பிரமணிய ரெட்டியார், சுஜாதா ஜீவன் உள்பட பலர் கலந்துகொண்டனர். தண்டையார்பேட்டை தலைமை தபால் நிலையம் அருகில் வடசென்னை கிழக்குமாவட்ட தலைவர் கிருஷ்ணகுமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

சிறப்பு அழைப்பாளராக மாநில பிரசார பிரிவு தலைவர் குமரிகிருஷ்ணன், சிந்தனையாளர் பிரிவு மாவட்ட தலைவர் ஆர்.பி. சுந்தரராஜன், ஊடக பிரிவு மாவட்ட தலைவர் முருகவேல் மற்றும் நிர்வாகிகள் ஆர்.யு.எஸ்.ரெட்டி, கோவிந்தராஜன், ராமையா, வன்னியராஜன், டில்லி பாபு, சுரேஷ்குமார், பூபால குருசாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் வேளச்சேரி காந்தி வீதியில் மாவட்ட தலைவர் சாய் சத்யன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாநில துணை தலைவர் சுமதி வெங்கடேசன், பொதுச் செயலாளர் முத்து மாணிக்கம், வெளிநாடு வாழ் தமிழர் பிரிவு மாவட்ட தலைவர் திருப்புகழ், கேன்ஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர். மத்திய சென்னை மேற்கு மாவட்ட பா.ஜனதா சார்பில் வில்லிவாக்கம் பஸ் நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் தனசேகர் தலைமை தாங்கினார். மாநில துணைத்தலைவர் டால்பின் ஸ்ரீதர், செயலாளர் பரிமளா சம்பத், மாவட்ட பொதுச்செயலாளர் லதா சண்முகம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

மத்திய சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் கலெக்டர் அலுவலகம் அருகில் மாவட்ட தலைவர் விஜய் ஆனந்த் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாநில செயலாளர் வினோஜ் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மின்கட்டண உயர்வுக்கு அ.தி.மு.கவே காரணம்

செல்வபெருந்தகை எம்.எல்.ஏ. பேட்டி

நெல்லை மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் நினைவு தினத்தையொட்டி தாமிரபரணி ஆற்றில் காங்கிரஸ் சார்பில் மாநகர் மாவட்ட தலைவர் சங்கரபாண்டியன் தலைமையில், முன்னாள் மத்திய மந்திரி தனுஷ்கோடி ஆதித்தன், சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை எம்.எல்.ஏ., ரூபி மனோகரன் எம்.எல்.ஏ., மாவட்ட பொதுச்செயலாளர் சொக்க லிங்ககுமார் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பின்னர் செல்வபெருந்தகை எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது:– உரிமைகளுக்காக போராடியவர்களின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

அவர்கள் நினைவாக நினைவு மண்டபம், நினைவு தூண் அமைக்க வேண்டும். காங்கிரஸ் சார்பில் அதற்கான செலவுகளை ஏற்க தயாராக உள்ளோம். மின்கட்டண உயர்வை மக்கள் தாங்கும் நிலையில் இல்லை. ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது மத்திய அரசின் உதய்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு அதில் கையெழுத்திடவும் மறுத்தார். ஆனால் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு உதய் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தோடு அதற்கு கையெழுத்துமிட்டனர். இதனால் மாநில உரிமை பறிபோனதோடு எந்தவிதமான கடனும் வாங்க முடியவில்லை. நீட் தேர்வு, உதய்திட்டம் உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு திட்டங்களுக்கு அப்போதைய அ.தி.மு.க. அரசு ஆதரவு தெரிவித்தது. மின்கட்டணம் உயர்த்தப்பட்டதுக்கு முழுக்க முழுக்க அ.தி.மு.க. தான் காரணம். கள்ளக்குறிச்சி மாணவியை எங்கள் வீட்டு பிள்ளையாக பார்க்கிறோம். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நிலையில் அப்போது சரியான நடவடிக்கை எடுத்தார். பெரிய வன்முறைகள் நடந்த போதும் பொலிஸார் துப்பாக்கி சூடு உள்ளிட்டவை நடத்தாமல் நிலைமையை சரியாக கையாண்டனர். இதற்காக பொலிஸாருக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

அ.தி.மு.கவின் 7 வங்கி கணக்குகளை வேறு யாருக்கும் மாற்றக்கூடாது

ரிசர்வ் வங்கிக்கு பன்னீர்செல்வம் கடிதம்

அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி நியமிக்கப்பட்டதற்கு ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். கட்சி விதிகளுக்கு முரணாக கூட்டத்தை கூட்டி நிர்வாகிகளை நியமிப்பது, நீக்குவது செல்லாது என அவர் தேர்தல் ஆணையத்திற்கும், நாடாளுமன்ற சபாநாயகருக்கும் கடிதம் எழுதினார். எடப்பாடி பழனிசாமியின் ஒவ்வொரு நகர்வுக்கும் ஓ.பன்னீர் செல்வம் முட்டுக்கட்டை போட்டு வருகிறார். இந்த நிலையில் கட்சியின் புதிய பொருளாளராக திண்டுக்கல் சீனிவாசன் நியமிக்கப்பட்டு இருக்கிறார் எனவும் அவரது பெயரில் வங்கிக் கணக்கை மாற்றம் செய்ய வேண்டும் எனவும் எடப்பாடி பழனிசாமி கரூர் வைஸ்யா வங்கிக்கு கடிதம் கொடுத்தார்.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அ.தி.மு.க. பொருளாளராக தான் நீடிக்கிறேன் எனவும், கணக்குகளை தான் நிர்வகிக்கிறேன் எனவும், வேறு யாருக்கும் மாற்றம் செய்யக்கூடாது எனவும் ஓ.பன்னீர் செல்வம் கடிதம் கொடுத்தார். ஆனால் வங்கி அதிகாரிகள் அதனை ஆய்வு செய்து எடப்பாடி பழனிசாமி கொடுத்த கடிதத்தை ஏற்றுக் கொண்டு வங்கி செயல்பாட்டுக்கு அனுமதித்தனர். இந்த நிலையில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் என்ற பெயரில் ஓ.பன்னீர் செல்வம் சென்னை ரிசர்வ் வங்கி மண்டல இயக்குநருக்கு கடிதம் கொடுத்துள்ளார். அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் மற்றும் பொருளாளராக 15 ஆண்டுகள் இருந்து வங்கி கணக்குகளை கவனித்து வருகிறேன்.

கட்சி கணக்குகள், கட்சி தலைமை கட்டட நிதி கணக்கு, அ.தி.மு.க. கட்சி வளர்ச்சி நிதி கணக்கு, நிலையான வைப்பு ஆகிய 7 வங்கி கணக்குகள் கரூர் வைஸ்யா, இந்தியன் வங்கி, பாங்க் ஆப் இந்தியா ஆகியவற்றில் உள்ளன. கடந்த 11ம் திகதி அன்று சட்ட விரோத பொதுக்குழு கூட்டத்தின் போது அ.தி.மு.க. பொருளாளராக திண்டுக்கல் சீனிவாசன் நியமிக்கப்பட்டு இருக்கிறார் என அறிந்தேன்.

இந்த சட்டவிரோத நடவடிக்கையை வங்கி ஏற்றுக்கொள்ளக்கூடாது. நான் தற்போது வரை அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளராக இருந்து வருகிறேன். கட்சி விதிகளை மீறி புதிதாக எடுக்கப்பட்ட நிர்வாகிகள் செல்லாது. அது சட்ட விரோதமானது என நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்திடமும் விரிவான அறிக்கை கொடுக்கப்பட்டு ஆட்சேபனை தெரிவித்து உள்ளேன். இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் நீதித்துறைக்கு உட்பட்டதாகும். எனவே இந்திய தேர்தல் ஆணையம் இறுதி முடிவு எடுக்கும் வரை மேற்கண்ட வங்கி கணக்குகளின் செயல்பாட்டை நிறுத்துமாறும் அனைத்து வங்கிகளுக்கும் தகுந்த உத்தரவுகளை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

குட்கா வழக்கில் முன்னாள் அமைச்சர்களை விசாரிக்கலாம்; சி.பி.ஐக்கு தமிழக அரசு அனுமதி

சென்னையில் தடை செய்யப்பட்ட குட்கா பொருள்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக, அமைச்சர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள், வணிக வரித்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சம் தரப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதைத்தொடர்ந்து வருமான வரித்துறை அதிகாரிகள், பல்வேறு இடங்களில் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர். 2017ம் ஆண்டு முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கரின் வீடு மற்றும் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி பல்வேறு ஆவணங்களை கைப்பற்றினர். பின்னர் இந்த வழக்கு 2018ம் ஆண்டு சி.பி.ஐக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், குட்கா வழக்கில் முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், ரமணா உள்ளிட்ட 12 பேரிடம் விசாரணை நடத்துவதற்கு அனுமதி அளிக்கும்படி தமிழக அரசுக்கு சி.பி.ஐ. கடிதம் எழுதியது. இதையடுத்து, குட்கா வழக்கில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளிடம் விசாரணை நடத்த சி.பி.ஐக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கி உள்ளது. அதன்படி முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா, சென்னை காவல் ஆணையர்களாக இருந்த ராஜேந்திரன், ஜார்ஜ் உள்ளிட்ட 12 பேரிடம் விசாரணை நடத்த உள்ளனர். இதன்மூலம் தமிழகத்தில் குட்கா வழக்கு மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

கிழக்குக்கு தமிழ் பேசும் ஒருவரை ஆளுநராக நியமிக்கக் கோரிக்கை

புதிய ஜனாதிபதியிடம் உலாமாக் கட்சி வேண்டுகோள்

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணத்தில் 80 வீதமானோர் தமிழ்ப் பேசும் மக்களே. இதன் ஆளுநராகத் தமிழ்ப் பேசும் ஒருவர் நியமிக்கப்படுவதன் மூலமே மக்கள் மொழி பெயர்ப்பாளரின்றி தமது பிரச்சினைகளை ஆளுநரிடம் எடுத்துச்செல்ல முடியும்.

அதனால் கிழக்கு மாகாண ஆளுநராக கிழக்கை சேர்ந்த தமிழ் பேசும் ஒருவரை நியமிக்கும்படி ஐக்கிய காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மேலும் தெரிவித்ததாவது:- மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே அம்மாகாண மக்களின் காலடிக்கு அரச சேவைகள் வர வேண்டும் என்பதற்காகவே.

மொழி ரீதியாக தமிழைக் கொண்ட வடமாகாணத்துக்கு பெரும்பாலும் தமிழ் பேசுபவர் நியமிக்கப்பட்டதை கண்டுள்ளோம். ஆனால் இன்று கிழக்கில் முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.எம்.ஏ. ஹிஸ்புல்லாவை தவிர வேறு தமிழ் பேசும் ஆளுநர் நியமிக்கப்படவில்லை.

ஆகவே, புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச்செல்லும் நல்லதொரு தேசிய அரசியல் வழிகாட்டலில் கிழக்குக்கான ஆளுநரும் தமிழ் பேசும் ஒருவர் நியமிக்கப்படுவது மிக நல்லது என்ற கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவுக்கட்சியான ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) ஆகிய நாம் கேட்டுக்கொள்கிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் பாதுகாப்பு செயலாளராக மீண்டும் கமல் குணரட்னவை நியமித்திருக்கின்றமை மிகவும் பொருத்தமான செயலாகும்.

கமல் குணரட்ன அவர்கள் பாதுகாப்பு செயலாளராக கடந்த அரசில் பொறுப்பேற்றது முதல் நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகச்சிறந்த முறையில் இருந்ததை கண்டோம்.

பெரும்பாலும் பொலிஸாரும், இராணுவத்தினரும் மிகவும் ஒழுக்கத்துடன் நடந்து கொண்டமையையும் நாட்டின் எந்தவொரு மூலையிலும் பயங்கரவாத செயல்கள் மீளெழாத வகையில் நாட்டை ஸ்திரமாக வைத்ததில் கமல் குணரட்னவின் பங்கு அளப்பரியது.

இனவாதம், மதவாதம் இல்லாத சிறந்த ஆளுமையையும் திறமையையும் கொண்ட ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவை மீண்டும் பாதுகாப்பு செயலாளராக நியமித்தமைக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதுடன் கமல் குணரட்னவுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. -என்றார்.

மட்டு. நரசிம்ம காளியம்மன் உற்சவம் இன்று ஆரம்பம்

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு- கொல்லநுலை - தேவிலாமுனை அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம காளியம்மன் ஆலய வருடாந்த அலங்கார சடங்கு உற்சவம் இன்று அம்பாளுக்கு மண்டபம் காவல் பண்ணுதல் கிரியைகள் மற்றும் திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 28 ஆம் திகதி அதிகாலை பள்ளயச் சடங்கு இடம்பெற்று, தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவுபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைச் செயலாளர் பா.ஜெயாகரன் தெரிவித்தார்.

உற்சவத்தில் 24 மற்றும் 25 ஆம் திகதி காவடி மற்றும் தீச்சட்டி ஏந்தி மகர தோரண ஊர்வலமும், 27 ஆம் திகதி கொல்லநுலை பேச்சியம்மன் தேவஸ்தானத்திலிருந்து தீக்கட்டை எடுத்து வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

ஆலய உற்சவக் கிரியைகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.வே.கு.ருசாந்தன் சர்மா மற்றும் உற்சவ கால பிரதமகுரு சிவஸ்ரீ பொன்னம்பலம் சுரேந்திரன் ஐயா ஆகியோர் நிகழ்த்துவர்.

கியூவில் நிற்கையில் சாவு கிண்ணியாவில் சம்பவம்

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் இரு நாள்களாக எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக காத்திருந்த 58 வயதுடைய நபரொருவர் மயக்கமுற்ற நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

இவ்வாறு உயிரிழந்தவர் கிண்ணியா முனைச்சேனை பகுதியைச் சேர்ந்த முகம்மது ரீஃப் ரம்லான் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் சடலம் நேற்று கிண்ணியா தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டு. கருவேப்பங்கேணியில் சிறுவர் பூங்கா திறந்துவைப்பு

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு கருவேப்பங்கேணியில் சிறுவர் பூங்காவொன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

'ஓசியின் லங்கா' நிறுவனத்தினூடாக மகாதேவனின் 1.2 கோடி ரூபா நிதிப் பங்களிப்பில் இச்சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பூங்காவிற்கான காணி மட்டக்களப்பு மாநகர சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் தி.சத்தியசீலன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.வாசுதேவன் மற்றும் 'ஓசியன் லங்கா' நிறுவன உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ராஜபக்ஷ குடும்ப தொழிற்சாலைகளில் எமது பிள்ளைகள் இருக்கின்றார்களா?

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கேள்வி

உகண்டாவில் உள்ள ராஜபக்ஷ குடும்பத்தினரின் 11 தொழிற்சாலைகளிலும் எமது பிள்ளைகள் இருக்கின்றார்களா? என்பதை உலகவாழ் உறவுகள் ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டும் என வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவி கலாரஞ்சினி கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று(வெள்ளிக்கிழமை) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

13 வருடங்களாக எமது உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை சொல்லாத இந்த அரசை நாங்கள் நம்பமாட்டோம். இந்த ஆட்சி மாற்றம் எங்களுக்குப் பெரிதாக ஒன்றும் செய்யப்போவதில்லை.

நாங்கள் சர்வதேசத்தின் ஊடாக நீதியை கேட்டு நிற்கின்றோம். இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதை சர்வதேசம் பார்த்துக்கொண்டிருக்கின் றது.

சர்வதேசம், இலங்கை தொடர்பில் அவதானித்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வையும், எமக்கான நீதியையும் பெற்றுத்தர வேண்டும் எனக் கேட்டு நிற்கின்றோம்.

இதேவேளை, உலகளாவிய ரீதியில் வாழ்கின்ற தமிழர்கள் ஒன்றிணைந்து, போராட்டங்களை முன்னெடுத்து எமது போராட்டத்துக்கும், அரசியல் தீர்வுக்கும் முன்னின்று உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை அரசாங்கத்தில் குடும்ப ஆட்சியும், இன அழிப்பும் நடந்து, அவர்கள் கலைக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்ட பின்னர் எங்களுக்கான தீர்வு சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக மேற்கொள்ளப்படும் என நாங்கள் எதிர்பார்த்திருந்தோம்.

தற்பொழுதுள்ள ஜனாதிபதி பதவியை இழந்து நிற்கும்போது, எங்களுடைய மண்ணில் வந்து எங்களை சந்தித்தார். 'உங்களது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். தற்பொழுது நான் பதவியில் இல்லை. மஹிந்தவின் மனைவியின் பிள்ளை காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவர்கள் தேடுவார்கள்.

அவர்களுக்கான சட்டத்தை பயன்படுத்துவார்கள். நான் இந்தப் பதவிக்கு வந்தால், நிச்சயமாக பிள்ளைகளை மீட்டுத்தருவேன். – என்று கூறியிருந்தார். அவரோ அல்லது அவர் சார்ந்த எவருமோ எமக்கு எதுவும் செய்யப்போவதில்லை.

இன்று ராஜபக்ஷ குடும்பத்தினர், நாடு கடத்தப்பட்டு அநாதைகளாகத் தெருத்தெருவாக திரிகின்ற இந்த வேளையில், உண்மையாக அந்த இனவழிப்பை செய்தவர்களைக் கைது செய்வதற்கு சர்வதேசம் முன்வரவேண்டும். அவ்வாறு கைது செய்து எமக்கான நீதியை பெற்றுத்தருவார்கள் என்று நம்புகின்றோம். உகண்டா எனும் நாட்டிலே, ராஜபக்ஷ குடும்பத்தினர் 11 தொழிற் சாலைகளை அமைத்து அங்கு எமது பிள்ளைகளை சம்பளமில்லாத கூலித்தொழிலாளிகளாக வேலைக்குவைத்திருக்கலாம்என்றுநாங்கள்நம்புகின்றோம்.

கையளிக்கப்பட்டு காணாமலாக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று கூற முடியாதவர்கள், எங்களுடைய பிள்ளைகளை கூலித்தொழிலாளர்களாக வைத்திருக்கலாம் என்று நம்புகின்றோம்.

அந்த தொழிற்சாலைகளை நிர்வகிக்கின்றவர் வேலுப்பிள்ளை கனநாதன் என்ற ஒரு தமிழர் உள்ளார். அவருடன் உலக நாடுகளில் உள்ள எமது உறவுகள் தொடர்புகொண்டு, எவ்வாறு அந்த தொழிற்சாலைகள் இயங்குகின்றன என்பதையும், அங்கு எமது பிள்ளைகள் இருக்கின்றார்களா என்பதை அறிவதற்கும் முன்வரவேண்டும்.

நிச்சயமாக எமது பிள்ளைகள் கொல்லப்படவில்லை. அவர்கள் அனைவரும் இந்த குடும்பத்தின் கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை குழப்ப நிலையிலிருந்து விடுபடும் வரை சர்வதேச நாணயநிதியம் உதவிகளை வழங்காது

ஜோன்ஹொப்ஹின்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் தெரிவிப்பு

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுபடும் வரை சர்வதேச நாணயநிதியத்தின் உதவி அந்த நாட்டுக்குக் கிடைக்காது என ஜோன் ஹெப்ஹின்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் டெபோரா பிராவுட்டிகம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போதைய குழப்பநிலையிலிருந்து மீளவேண்டும் அதன் பின்னரே சர்வதேச நாணயநிதியம் உதவ முன்வரும் என அவர் சி.என்.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

நிலைவரம் தொடர்ச்சியாக குழப்பமானதாக காணப்படும்போது சர்வதேச நாணயநிதியம் அரசாங்கத்துடன் பேச்சுகளில் ஈடுபடமுடியாது எனத் தெரிவித்துள்ள அவர், ஆகவே அரசாங்கம் ஸ்திரத்தன்மை பெறும்வரை – அவர்கள் நிதியமைச்சர் ஒருவரை நியமிக்கும்வரை – சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுகளில் ஈடுபட எவருமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணம்திருப்பி கிடைக்காது என கருதவேண்டிய நிலை காணப்பட்டால் சர்வதேச நாணயநிதியம் நிதிஉதவி செய்யாது என அவர் தெரிவித்துள்ளார்.

உணவு ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டு பதினொரு சிறார்கள் வைத்தியசாலையில்!

திருகோணமலையில் உணவு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டு 11 சிறார்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். திருகோணமலை – பாலையூற்று பகுதியை சேர்ந்த 15 வயதிற்குட்பட்ட 11 சிறார்களுக்கே இவ்வாறு உணவு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தலைக்கு வைக்கும் பேன் மருந்தை தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து சமையலறையில் வைத்திருந்த நிலையில் நேற்று காலை அந்த எண்ணெய்யை தேங்காய் எண்ணெய் என நினைத்து தாயார் நூடில்ஸ் தயாரித்து காலை உணவாக சிறார்களுக்கு கொடுத்துள்ளார். இதனால் மயக்கமடைந்த சிறார்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர் பில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

எனது உயிரை இழந்தேனும் ரணிலை விரட்டாமல் ஓயேன்!

போராட்டக்களத்தில் பெண் ஒருவரின் ஆக்ரோஷம்

தற்கொலை செய்தேனும் ரணில் விக்கிரமசிங்கவை விரட்டாமல் ஓயமாட்டோம் என காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் இருந்த பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பெண்ணொருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு–

நாங்கள் வீதியில் நிற்கின்றோம். நீங்கள் இவ்வாறு செயற்படுவீர்கள் என்று கனவிலும் நினைக்கவில்லை.

நீங்கள் விலங்குகளைப் போன்று செயற்படுகின்றீர்கள். நான் ஒரு தாய், எனது முதுகில் நீங்கள் அடித்த அடியால் ஏற்பட்ட காயத்தின் தழும்பு இருக்கிறது.

சீருடைகளை அணிந்து இதுபோன்ற வெறுக்கத்தக்க செயல்களில் ஈடுபடாதீர்கள். அந்தத் துப்பாக்கியை நீட்ட வேண்டியது எம்மை நோக்கியல்ல.

இந்த இடத்தை இன்று நாம் ஒப்படைக்க இருந்தோம். அதனை ஏற்றால் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வெட்கம். அதன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க எமக்கு இத்தகையதொரு அநீதியை இழைத்தார். நாம் பேசாமல் இருக்கமாட்டோம். போராட்டத்தை நிறுத்த மாட்டோம். நாம் இவற்றை எதிர்க்கின்றோம்.

முன்னரைப் போன்று நினைக்காதீர்கள் நாம் புதிய சந்ததியுடன் இருக்கின்றோம். அந்தக் காலம் முடிந்துவிட்டது. நாம் இதனைக் கைவிட மாட்டோம். – என்றார்.

உலக உணவு திட்டத்தின் தலைவர் இலங்கை விஜயம்

மஹிந்த சமரசிங்க தகவல்

உரம் மற்றும் பிற விவசாய உள்ளீடுகள் போன்ற உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண உலக உணவுத் திட்டத்துடன் பணியாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விருப்பத்துடன் இருப்பதை உலக உணவு திட்டத்தின் தலைவர் டேவிட் பீஸ்லியிடம் அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவர் மஹிந்த சமரசிங்க தெளிவுபடுத்தியுள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவர் மஹிந்த சமரசிங்க உலக உணவுத் திட்டத்தின் தலைவர் டேவிட் பீஸ்லியை கடந்த புதன்கிழமை வொஷிங்டனில் சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் உலக உணவு திட்டத்தின் தலைவர் டேவிட் பீஸ்லி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் அவர் மேற்கொள்ளவுள்ள இலங்கை விஜயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகவே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தாம் மேற்கொள்ளவுள்ள இலங்கை விஜயம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பை வெகுவாக எதிர்பார்த்துள்ளதாக உலக உணவுத்திட்ட தலைவர் இதன்போது தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2022இல் வெளியிடப்பெற்றது.